ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2110/41 - 2019 පෙබරවාරි මස 14 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.02.14
2110/41 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மேல் மாகாண மாகாண சபை

*2018 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, மேல் மாகாண உள்ளூராட்சித் தாபன வள நிலைய நியதிச்சட்டம்*

*2018 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, மேல் மாகாண உள்ளூராட்சித் தாபன வள நிலைய நியதிச்சட்ட வரைபிற்கான மேல் மாகாண அமைச்சரவையின் அங்கீகாரம் 2018.01.24 ஆந் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மான இலக்கம் VI/107/01-2018-02(iii) இன் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளதெனவும் அது மேல் மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக என்னால் முன்மொழியப்படவுள்ளதெனவும் பொது மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்காகவும் இத்தால் அறிவிக்கிறேன்.*

இசுர தேவப்பிரிய,
முதலமைச்சர் மற்றும் பொருளாதார ஊக்குவிப்பு, மின் சக்தி மற்றும் எரிசக்தி, சூழல் நடவடிக்கை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

2019, சனவரி 30.

**2018 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, மேல் மாகாண உள்ளூராட்சித் தாபன வள நிலைய நியதிச்சட்டம்**

மேல் மாகாண உள்ளூராட்சித் தாபனங்களது பதவிப் பொறுப்பாளர்கள் மற்றும் பணிக்குழுவினர்களது பயிற்சித் தேவைகளை இனங்கண்டு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காகவும், உள்ளூராட்சித் தாபனங்களது மக்கள் சேவையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக தகவல் தொழில்நுட்ப பாவனை தொடர்பான அறிவினை உள்ளூராட்சித் தாபனங்களில் பரவலாக்குவதற்காகவும், அதற்காக மேல் மாகாண உள்ளூராட்சித் தாபன வள நிலையம் எனும் பெயர் கொண்ட தாபனமொன்றைத் தாபிப்பதற்காகவும், அது தொடர்பான அனைத்து விடயங்களுக்கான ஏற்பாடுகளை வழங்குவதற்காகவுமான நியதிச்சட்டமாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் இவ்வாறு இயற்றப்படுகிறது :

1. இந்நியதிச் சட்டமானது மேல் மாகாண மாகாண சபையின் 2018 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்க, மேல் மாகாண உள்ளூராட்சித் தாபன வள நிலைய நியதிச் சட்டம் என அறியப்படுவதோடு மேல் மாகாண ஆளுநரினால் அங்கீகரிக்கப்படும் தினத்திலிருந்து செயற்படும். குறுந்தலைப்பும் நடைமுறைக்கு வரும் திகதியும்.

1A - PG 4387 — 18 (2019/02)
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## பகுதி I

### மேல் மாகாண உள்ளூராட்சித் தாபன வள நிலையத்தினை நிறுவுதல்

*நிறுவுதல்.*

2. இங்கு இதன் பின் "நிலையம்" என அறியப்படும் மேல் மாகாண உள்ளூராட்சித் தாபன வள நிலையம் இத்தால் நிறுவப்படுகிறது.

3. நிலையமானது இரண்டாவது பிரிவின்படி அதற்கு வழங்கப்பட்டுள்ள பெயரில் கூட்டுத்தாபனமாயிருப்பதுடன் நிலையான இருப்பு மற்றும் பொதுவான முத்திரையினைக் கொண்டிருத்தல் அவசியம். மேலும், அப்பெயரில் நிலையத்தினால் வழக்குத் தொடுக்கக்கூடிய மற்றும் அப்பெயரில் நிலையத்திற்கெதிராக வழக்குத் தொடுக்கப்படக் கூடியதாயிருக்கும்.

*நிலைய முத்திரை.*

4. (1) நிலைய முத்திரை பணிப்பாளரின் பொறுப்பிலிருத்தல் அவசியம்.

(2) நிலைய முத்திரை பணிப்பாளர் சபை தீர்மானிக்கும் முறைப்படி இருத்தல் அவசியம்.

(3) தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் முன்னிலையில் அன்றி எந்தவொரு சாசனப்பத்திரத்திலும் ஆவணத்திலும் ஒப்பந்தத்திலும் சபை முத்திரையினை இடக்கூடாதென்பதுடன், தான் சமுகமளித்ததாக அவ்விருவரும் அச்சாதனப்பத்திரத்தில், ஆவணத்தில் அல்லது ஒப்பந்தத்தில் ஒப்பமிடல் வேண்டும்.

(4) நிலைய முத்திரையிடப்படும் ஆவணங்கள் தொடர்பான ஒரு பதிவேட்டினை நிலையம் பேணிச்செல்லல் அவசியம்.

## பகுதி II

### நிலையத்தின் நோக்கம்

*நோக்கம்.*

5. நிலையத்தின் நோக்கம் கீழ்வருமாறு :

(1) மேல் மாகாண உள்ளூராட்சித் தாபனங்களுக்குத் தெரிவாகும் பதவிப் பொறுப்பாளர்கள் மற்றும் மேல் மாகாண உள்ளூராட்சித் தாபனங்களில் கடமை புரியும் அலுவலர்களுக்கான பயிற்சித் தேவைகளை இனங்காணல் மற்றும் அவ்வாறு இனங்காணுவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், தேவையான இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(2) மேல் மாகாண உள்ளூராட்சித் தாபனங்களது மக்கள் சேவையினை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாவனை தொடர்பாக உள்ளூராட்சித் தாபனங்களது பதவிப் பொறுப்பாளர்கள் மற்றும் பணிக்குழுவினர்களைத் தெளிவூட்டுதல்.

(3) மேல் மாகாணத்தினுள் உள்ளூராட்சித் தாபனங்களை நோக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக பயிற்சிக் கேட்போர் கூடம், வள நிலைய ஆய்வு நிலையம், ஆய்வு கூடம் மற்றும் விடுதி முகாம்களை பேணிச் செல்லல்.

(4) உள்ளூராட்சித் தாபனங்களது பணிகள் தொடர்பாக சமூகத்தினைத் தெளிவூட்டுவதற்கான நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

*நிலைய உறுப்பினர்கள்.*

6. நிலையமானது கீழ்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாகும் :

(1) பதவி வழி உறுப்பினர்கள் :

(அ) மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ;

(ஆ) மேல் மாகாண பிரதிப் பிரதான செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ;

(இ) மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்.

(2) நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்.-

மேல் மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படும் மேல் மாகாண மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நகர பிதா ஒருவரும், தலைவர் ஒருவரும், நகர ஆணையாளர் ஒருவரும், நகர சபை அல்லது பிரதேச சபை செயலாளர் ஒருவரும். உறுப்பினர்களது பதவிக்காலம்.

(3) மேல் உப பிரிவின் கீழ் பதவி வழி உறுப்பினர்களுள் மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் நிலையத்தின் தலைவராயிருத்தல் அவசியம். நிலையத்தின் தலைவர்.

(4) நிலையத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அமைச்சரினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் முறைப்படி வேதனம் வழங்கப்படலாம்.

7. (1) நிலையத்தினால் தீர்மானிக்கப்படல் அவசியம் என இந்நியதிச் சட்டத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்கள் மற்றும் பிரச்சினைகளும் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் அவற்றின் கீழ் உருவாக்கப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப நடாத்தப்படும் நிலைய கூட்டமொன்றிற்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களது பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படல் அவசியம். தீர்மானங்கள்.

(2) ஏதாவதொரு கூட்டத்திற்கு சமுகமளித்திருக்கும் வாக்குகள் ஏதாவதொரு சிக்கல் தொடர்பாக சமமாகப் பிரிந்திருக்கும் சந்தர்ப்பமொன்றில், அக்கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் தலைவர் அல்லது வேறு உறுப்பினருக்கு தமக்குரிய வாக்கிற்கு மேலதிகமாகத் தேர்வு வாக்கொன்று உரித்தாகும்.

(3) நிலையத்தின் எந்தவொரு கூட்டத்திற்கும் ஆகக்குறைந்தது மூன்று உறுப்பினர்கள் இருத்தல் அவசியம்.

(4) நிலைய உறுப்பினர்களில் ஏதாவதொரு வெற்றிடம் காணப்படும் நிலையிலும் நிலையம் தொழிற்பட முடியும். நிலைய உறுப்பினர்களிடையே ஏதாவதொரு வெற்றிடம் காணப்படுதல் அல்லது அதன் உறுப்பினரொருவரை நியமிப்பதிலோ அல்லது பெயரிடுவதிலோ ஏதாவதொரு குறைபாடு காணப்படுவதை மாத்திரம் காரணமாகக் கொண்டு நிலையத்தின் ஏதாவது செயன்முறை அல்லது நடவடிக்கையினை செல்லுபடியற்றதாக்குதல் அல்லது செல்லுபடியற்றதாகக் கருதுதல் ஆகாது.

(5) இந்நியதிச் சட்டத்தின் 16 ஆவது பிரிவின் கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளர், நிலையத்தின் செயலாளராகத் தொழிற்படல் அவசியம்.

(6) நிலைய கூட்டங்களுக்கு சமுகமளித்தல் மற்றும் அக்கூட்டங்களில் கருத்து தெரிவிக்கும் உரிமை, நிலையத்தின் செயலாளருக்கு உண்டெனினும் நிலையத்தின் கூட்டங்களில் வாக்களிக்கும் உரிமை இல்லை.

8. நிலையத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் கீழ்க்குறிப்பிட்டவாறு அமைதல் அவசியம் : அதிகாரங்கள் மற்றும் தொழிற்பாடுகள்.

(1) மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்கள ஊழியர்களுக்காகவும், மேல் மாகாண உள்ளூராட்சித் தாபனங்களின் பதவிப் பொறுப்பாளர்கள் மற்றும் பணிக் குழுவினர்களுக்காகவும், மேல் மாகாண உள்ளூராட்சியுடன் இணைந்த பணிக் குழுவினர்களுக்காகவும் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு அபிவிருத்திக்குத் தேவையான பயிற்சி நிகழ்ச்சிகளைத் திட்டமிடுதல் நடைமுறைப்படுத்துதல்.

(2) மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சித் தாபனங்களுடன் இணைந்த பணிக்குழுவினர்களுக்காக உள்ளூராட்சியுடன் தொடர்புடையவாறு பயிற்சிச் சான்றிதழ் பாடநெறிகளை நடாத்துதல்.

(3) நிலையத்தின் பெயரில் வேறாக நிதியமொன்றைப் பேணிச் செல்லல்.

(4) உள்ளூராட்சித் தாபனங்களது வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறனினை மேம்படுத்துவதற்காகவும் உள்ளூராட்சி நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காவும், உள்ளூராட்சித் தாபனங்களை, தகவல் தொழில்நுட்ப பாவனைக்குத் திருப்புதல் மற்றும் அது தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

(5) நிலையம் நடாத்துகின்ற பயிற்சி நிகழ்ச்சிகள் ஊடாக அறிவினை விருத்திச் செய்வதில் விசேட அறிவுடைய தொழில் முறையாளர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அதற்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

(6) இலங்கையினுள் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள், சிவில் அமைப்புகள் மூலம் நிலையத்தின் பெயரில் நிலையத்தின் நோக்கங்களுக்கு ஏற்றவாறு வழங்கப்படும் எந்தவொரு நன்கொடையினையும் பொறுப்பேற்றல், கொண்டிருத்தல் அவ்வாறான நிதி நன்கொடைகளை தேவைக்கேற்றவாறு நிலைய நிதியத்தின் வெவ்வேறு கணக்குகளின் கீழ் பேணிச் செல்லல்.

(7) நிலையத்தினால் வழங்கப்படும் சேவைகளுக்கு கட்டணங்களை நிர்ணயித்தல் மற்றும் அறவிடல்.

(8) நிலையத்தின் நோக்கங்களின் கீழ் தொழிற்படுவதற்காக வேறு தரப்பினர்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்.

(9) உள்ளூராட்சித் தாபன ஊழியர்களது அறிவு விருத்திக்குத் தேவையான நூல்கள், சஞ்சிகைகள், ஆவணங்களை வெளியீடு செய்தல் உட்பட நிலையம் தீர்மானிக்கும் அளவிற்குத் தேவையான தொழில்நுட்ப உதவியினை வழங்குதல்.

(10) நிலையத்தினால் அவசியம் எனத் தீர்மானிக்கப்படும் அனைத்துப் பதவிகளையும் அதற்குரிய சரியான நடைமுறைகளுக்கேற்ப உருவாக்குதல்.

இருப்பினும், நிலையத்தின் ஆரம்பக் காலத்தில் நிலையத்தின் ஊழியர் குழுவானது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மேல் மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவினுள் தொழிற்படல் வேண்டும்.

(11) இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகத் தேவையானது என அல்லது காரணமானது என நிலையம் தீர்மானிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடல்.

(12) ஏதாவது அசையா அல்லது அசையும் சொத்தினைக் கையகப்படுத்துதல், கொள்வனவு செய்தல், கொண்டிருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடல், அடகு பிடித்தல், விற்பனை செய்தல் அல்லது வேறு வகைகளில் அகற்றுதல்.

(13) நிலையத்தின் பணிக்குழுவிலுள்ள பதவிகளுக்கு நியமித்தல், பதவி விலக்கல் தொடர்பான செயன்முறைக் கோவைகளை தயாரித்தல் மற்றும் தீர்மானித்தல்.

(14) நிலையத்தினால் சேவைகள் பெற்றுக்கொள்ளப்படும் வளவாளர்களுக்கான கொடுப்பனவுகளைத் தீர்மானித்தல் மற்றும் வழங்குதல்.

(15) நிலையத்தின் பணிப்பாளர் உள்ளிட்ட நிலையப் பணிக்குழுவினர்களுக்கு வேதனம் வழங்குதல், அவ்வாறு வழங்கப்படும் வேதனம் அவர் வகிக்கும் நிரந்தரப் பதவிக்குரிய சம்பளத்தின் 1/4 பகுதியாக இருத்தல் அவசியம்.

அமைச்சர் நிலையத்தில் கட்டளைகள் இட முடியும்.

9. நிலையத்தினால் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதில் விடயங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் அமைச்சரினால் நிலையத்திற்கு சாதாரண அல்லது விசேட கட்டளைகளைப் பிறப்பிக்க முடிவதுடன் நிலையமானது அக்கட்டளைகளுக்குட்பட்டு செயற்படல் அவசியம்.

10. இந்நியதிச் சட்டத்தின் அதிகாரங்கள் மற்றும் விடயங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக ஆலோசனைகள் வழங்குவதற்காக ஆலோசனைச் சபையொன்று, இந்நியதிச் சட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் ஒழுங்குவிதிகளால் தீர்மானிக்கப்படும் முறைப்படி நியமிக்கப்படலாம்.

## பகுதி III

### நிலைய நிதியம்

11. (1) நிலையத்திற்கு நிலையத்தின் பெயரில் நிதியமொன்று இருத்தல் அவசியம். நிலைய நிதியம்.

(2) நிலைய நிதியத்திற்கு -

(அ) நிலையத்திற்காக மாகாண சபையினால் காலத்திற்குக் காலம் அங்கீகரிக்கப்படும் அனைத்து நிதிகளும் ;

(ஆ) நிலைய நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதில் மற்றும் அதிகாரங்கள் விடயங்களை நிறைவேற்றுவதில் நிலையத்தின் பெயரில் சேகரமாகும் அனைத்து நிதிகள் மற்றும் நிலைய சேவைகளை வழங்குவதில் அறவிடப்பட வேண்டிய அனைத்து நிதிகளும் ;

(இ) நிலையத்தின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதில், விடயங்களை நிறைவேற்றுவதில் நிலையத்தின் பெயரில் வழங்கப்படும் நிதி நன்கொடைகள் ;

(ஈ) நிலையத்தின் சேவைகளை எதிர்பார்த்து மேல் மாகாண உள்ளூராட்சித் தாபனத்தினால் வருடாந்த வரவு செலவுத் திட்ட ஆவணத்தினால் ஒதுக்கப்படும் நிதிகள் ஆகியன கிடைத்தல் அவசியம்.

(3) நிலைய நிதியத்திற்குக் கிடைத்துள்ள, நிலைய நிதியத்தினால் செலுத்தப்பட வேண்டிய அனைத்து நிதிகளும் அரச வங்கியொன்றில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

12. நிலைய நிதியத்திலிருந்து :-

(1) நிலைய நடவடிக்கைகளை முகாமை செய்வதற்கும், நிலைய உறுப்பினர்கள் மற்றும் கடமையிலீடுபட்டுள்ளோர்களுக்கு வேதனம் வழங்குவதற்கும், இந்நியதிச் சட்டத்தின் கீழ் நிலைய அதிகாரங்கள் மற்றும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கும், மேற்கொள்வதற்கும், நிலையத்தினால் காலத்திற்குக் காலம் அதிகாரமளிக்கப்படும் வேறு ஏதாவது விடயங்களுக்காகவும் நிலைய நிதியத்திலிருந்து நிலையத்தினால் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியும். செலவுகள்.

(2) நிலைய நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்படும் அனைத்துக் கொடுப்பனவுகளுக்குமான காசோலைகள் அல்லது கட்டளைகள் நிலையத்தினால் அதற்காக அதிகாரமளிக்கப்பட்ட இருவரினால் ஒப்பமிடப்படல் வேண்டும்.

13. (1) நிதியத்தின் நிதியாண்டு கலண்டர் ஆண்டாக இருத்தல் வேண்டும். வரவு செலவு அறிக்கை.

(2) நிலையத் தலைவர் ஒவ்வொரு ஆண்டிலும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளினால் தீர்மானிக்கப்பட்டுள்ள தினத்தில் அல்லது அதற்கு முன்னர் ஒழுங்குவிதிகளில் காட்டப்பட்ட மாதிரிக்கு அமைவாக, ஆரம்பிக்கின்ற நிதியாண்டிற்கான மதிப்பீடொன்றை, அவ்வருடத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானங்கள் மற்றும் உத்தேச செலவுகள் தொடர்பான விபரங்கள் உள்ளடங்கலாக தயாரித்து நிலையத்திற்குச் சமர்ப்பித்தல் அவசியம்.

(3) அம்மதிப்பீடு உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பு நிலையத்தினாலேயே அதில் ஏதும் திருத்தங்கள் இருக்குமாயின், அவற்றுடன் இறுதியாக கருத்திற்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படல் அவசியம்.

(4) நிலையத் தலைவரினால் அவசியமாயின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மதிப்பீடொன்றைத் தயாரித்து நிலையத்திற்குச் சமர்ப்பிக்க இயலும்.

(5) ஏதாவதொரு மதிப்பீடு அல்லது மேலதிக மதிப்பீடொன்றில் அடங்கியுள்ள அனைத்து விடயங்களையும் அல்லது அதில் சிலதை அங்கீகரிப்பதற்கு, மாற்றுவதற்கு அல்லது நிராகரிப்பதற்கு அல்லது ஏதாவது விடயங்களைச் சேர்ப்பதற்கு நிலையத்திற்கு இயலும்.

நிலையக் கணக்குகள்.

14. (1) நிலையத்தின் வருமானம், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் வேறு அனைத்துக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக இந்நியதிச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் ஒழுங்குவிதிகளால் தீர்மானிக்கப்படும் முறையில் முறைப்படி கணக்கு வைத்திருப்பதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் அவசியம்.

(2) எல்லா நிதியாண்டுகளுக்குமான வரவு செலவுக் கணக்கு மற்றும் கணக்கறிக்கை அடுத்த வருட மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் அவசியம்.

15. நிலைய கணக்குகளை கணக்காய்வு செய்தல் தொடர்பாக அரசியலமைப்பின் 154 ஆவது பிரிவின் ஏற்பாடுகள் உரித்துடையதாதல் அவசியம்.

பகுதி IV

**நிலையப் பணிக்குழுவினர்**

நிலையத்தின் பிரதான நிர்வாக அலுவலரை நியமித்தல்.

16. (1) மேல் மாகாண மாகாண சபை அரச சேவையில் பதவிநிலை பதவியொன்றை வகித்து மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சில் அல்லது உள்ளூராட்சித் திணைக்களத்தில் கடமையிலீடுபட்டுள்ள ஒருவரை நிலையததின் பணிப்பாளராக மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இரண்டாம் நிலை அடிப்படையில் நியமித்தல் அவசியம்.

(2) நிலையத்தின் செயற்பாடுகளை வழிநடாத்துதல், நிலையத்தின் அதிகார விடயங்கள் மற்றும் தொழிற்பாடுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், நிலையத்தில் கடமையிலீடுபட்டுள்ளோர்களது நிர்வாகம், கட்டுப்பாடு என்பன தலைவரது சாதாரண கட்டளை மற்றும் கட்டுப்பாட்டிற்குட்பட்டு பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

(3) வினைத்திறனாக நிலையத்தின் அதிகாரங்களை செயற்படுத்துதல், விடயங்கள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அவசியம் என நிலையம் கருதுகின்ற அலுவலர்களை அல்லது ஊழியர்களை இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக நிலையத்தினால் இயற்றப்படும் செயன்முறைக் கோவைக்கு இசைவாக நியமித்தல் மற்றும் பதவி அல்லது படித்தரத்திலிருந்து அகற்றுதல் ஆகியன மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் மேற்கொள்ளப்பட முடியும்.

நிலையத்தின் பணிக்குழுவிற்கு மேல் மாகாண அரச சேவை அலுவலர்களை நியமித்தல்.

17. (1) மேல் மாகாண சபை அரச சேவையில் ஈடுபட்டுள்ள யாராகிலுமொரு அலுவலரை, நிலையத்தின் வேண்டுகோளின்படி அவ்வலுவலரதும் மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு மற்றும் உரிய அமைச்சின் செயலாளரதும் விருப்பத்துடன் நிலையத்தினால் அவ்வாறான விருப்பத்துடன் நிச்சயிக்கப்படும் காலப்பகுதியொன்றிற்காக நிலையத்தின் தொழிற்பாடுகளுக்காக நிலையத்திற்கு தற்காலிகமாக நியமிக்க இயலும்.

(2) குறிப்பிட்ட காலப்பகுதிக்கு அரசிற்கு அல்லது மேல் மாகாண சபைக்குச் சேவையாற்ற உடன்பட்டு அரசுடன் உடன்படிக்கை செய்துகொண்டுள்ள ஏதேனுமொரு நபர் நிலையத்திற்காக சேவையாற்றும் ஏதேனுமொரு காலப்பகுதி அவ்வுடன்படிக்கையின் கட்டுப்பாடுகளை நிறைவேற்றும் விடயத்தில் அரசிற்கு அல்லது மாகாண சபைக்குச் செய்த சேவையாகக் கருதப்படல் அவசியம்.

## பகுதி V

### பொதுவான விடயங்கள்

18\. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக செயற்படுவதற்காகவும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் ஒழுங்குவிதிகளை உருவாக்குதல் அவசியம் என இந்நியதிச் சட்டத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்துவதற்காக அமைச்சரினால் ஒழுங்குவிதிகள் உருவாக்கப்பட முடியும்.

(2) அமைச்சரினால் உருவாக்கப்படும் அனைத்து ஒழுங்குவிதிகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு அது பிரசுரிக்கப்படும் தினத்திலிருந்து அல்லது வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட எதிர்கால திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

(3) அமைச்சரினால் உருவாக்கப்படும் ஒழுங்குவிதிகள் வர்த்தமானியில் பிரசுரமான பின்னர் இயலுமானவரை விரைவாக அங்கீகாரத்திற்காக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்படல் அவசியம். மாகாண சபையானது, அவ்வொழுங்குவிதியினை அங்கீகரித்து அது தொடர்பாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் அவசியம்.

அவ்வாறு அங்கீகரிக்கப்படவில்லையாயின், அது பற்றி வர்த்தமானி மூலம் அறிவிப்பதுடன் அன்று முதல் அவ்வொழுங்குவிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு பாதிப்பின்றி செல்லுபடியற்றதாகக் கருதப்படல் வேண்டும்.

19\. (1) இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களுக்காக மாகாணத்திலமைந்துள்ள ஏதாவதொரு அசையாச் சொத்தினை கையகப்படுத்துதல் அவசியம் என நிலையம் தீர்மானிக்குமிடத்து கையகப்படுத்த எதிர்பார்க்கும் சொத்து- *அசையாச் சொத்தினைக் கையகப்படுத்துதல்.*

(அ) அரச சொத்தாயின், அரசியலமைப்பின் 09 ஆவது அட்டவணையின் 1 ஆவது நிரலின் இணைப்பு II இன் 1:2 ஆம் பந்தியின் கீழான ஏற்பாடுகளுக்கமைவாக அச்சொத்தினை நிலையத்திற்கு வழங்குமாறும் ;

(ஆ) தனியார் சொத்தாயின், நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தித் தருமாறும் மாகாண அமைச்சரவையினால் தீர்மானம் மேற்கொள்ள இயலும்.

(2) (1) ஆவது உப பிரிவின் கீழ் மாகாண அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படுமிடத்து அதற்குரிய கோரிக்கை மேல் மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் பிரதான செயலாளர் ஊடாக அரச காணி விடயப் பொறுப்பு அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) (2) ஆவது உப பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, யாதாகிலுமொரு சொத்தொன்றை நிலையத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளுதல் தொடர்பாக செலுத்தப்பட வேண்டிய ஏதாவது தொகை நிலைய நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

20\. (1) நிலையத்தின் யாராகிலுமொரு உறுப்பினர் அல்லது நிலையத்தின் யாராகிலுமொரு ஊழியர் குற்றவியல் தண்டனைச் சட்டக் கோவையின் பொருள்கோடலுக்கமைவாக அரச ஊழியராக கருதப்படல் வேண்டும். *நிலைய உறுப்பினர்கள், ஊழியர்கள், அரச ஊழியர்கள்.*

(2) நிலையமானது இலஞ்ச சட்டத்தின் பொருள்கோடலுக்கமைவாக அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படல் அவசியம்.

21\. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் நிலையத்தினால் நன்னோக்குடன் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட்டதாக அனுமானிக்கப்படும் ஏதாவதொரு செயற்பாடு தொடர்பாக நிலையத்திற்கு எதிராகவும், *மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பாக பாதுகாப்பு.*

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அல்லது நிலையத்தின் தீர்மானத்தின்படி நிலைய அலுவலரொருவர், ஊழியரொருவர் அல்லது பிரதிநிதியொருவரினால் நன்னோக்குடன் மேற்கொள்ளப்படும் அல்லது மேற்கொள்ளப்பட்டதாக அனுமானிக்கப்படும் ஏதாவதொரு செயற்பாடு தொடர்பாக நிலையத்தின் யாராகிலுமொரு அலுவலருக்கு, ஊழியருக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு எதிராகவும் நீதிமன்றில் வழக்குத் தொடரப்படலாகாது.

பொருள் கொள்ளல்.

*22.* பதங்கள் தொடர்பாக வேறு பொருள்கொள்ளல் தேவைப்பட்டாலன்றி, இந்நியதிச் சட்டத்தில் -

"*அமைச்சர்*" என்பது, மேல் மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் எனவும்,

"*அமைச்சரவை*" என்பது, மேல் மாகாண அமைச்சரவை எனவும்,

"*மாகாண சபை*" என்பது, மேல் மாகாண சபை எனவும்,

"*நிலைய ஆரம்ப சந்தர்ப்பம்*" என்பது, இந்நியதிச் சட்டத்தின் கீழ் நிலையம் தொழிற்பட ஆரம்பித்து, நிலையமானது சுயாதீனமாக தொழிற்படுவதற்குப் பொருத்தமான நிலையினை அடைந்துள்ளதாக மேல் மாகாண அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட பின்னர் அவ்வமைச்சரவைத் தீர்மானத்திற்கு மேல் மாகாண ஆளுநர் அங்கீகாரமளிககும் தினம் வரையிலான காலம் எனக் கருதப்படும்.

முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறும்.

*23.* இந்நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் முரண்பாடுகள் ஏற்படின் சிங்கள மொழி வலுப்பெறுவதாக இருக்கும்.

*03-135*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.